2020 செப்டம்பர் 15]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2020), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 15-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து எடுத்துக்கொள்ளப்படவுள்ள சட்டமுன்வடிவும் இதே பொருள் தொடர்புடையதாக இருப்பதால், கருத்து தெரிவிக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள் மீதும் சேர்த்தே கருத்தைத் தெரிவிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, COVID-19 தொற்றால் இறப்பவர்களின் உடலை அவர்களுடைய உறவினர்களே பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோன்று, சென்னையில் ஒரு மருத்துவர் இறந்தார். அவருடைய உடலை அடக்கம் செய்ய முடியாமல், வேறு இடத்தில் அடக்கம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. உரிய மயானத்தில் அவருடைய உடலை அடக்கம் செய்ய வேண்டுமெனக் கோரி, அவருடைய மனைவி நீதிமன்றம் சென்றார்கள். அதேபோல், பல்வேறு இடங்களில் அந்த உடல்களை ஏரிகளில் புதைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தின்மூலம், எந்தப் பகுதியிலும் உள்ள மக்கள் எந்தவிதமான பிரச்சினையும் செய்யாமல், இறந்தவர்களை அந்தந்த மயானங்களில் அடக்கம் செய்யக்கூடிய நிலையை உருவாக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இதே உணர்வுகளை மனதிலே வைத்துக் கொண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவுக்கான அனுமதியை வழங்கினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, ஒரு மருத்துவர் கோவிட்–19 காரணமாக இறக்க நேரிட்டது. கோவிட் காலத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் நோய்த் தொற்று ஏற்பட்டு இறக்க நேரிடுகின்றபோது, சமூகம் அதை வேறுவிதமாகப் பார்க்கக் கூடாது, பொது மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்பதையும், முன்களத்தில் கடமையாற்றக்கூடிய மருத்துவர்களுக்கு, செவிலியர்களுக்கு, முன்களப் பணியாளர்களுக்கு இதுபோன்ற நிலை ஏற்படுகின்றபோது, அவர்களை உரிய அரசு

2020 செப்டம்பர் 15] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மரியாதையோடு, உரிய விதிமுறைகளின்படி நல்லடக்கம் செய்ய வேண்டும் என்ற கருத்தை நிலை நிறுத்துவதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. நீங்களும் இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்கிறீர்கள். இச்சட்டத்தின்படி, முறையாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2020), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”

எனக் கோருகிறேன்.

@ 15-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.